மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு 5,234 ஏக்கர்கள் முதல் போகப் பயிரும், 1733 ஏக்கர்கள் இரண்டாம் போகப் பயிரும் பாசன வசதி அளிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆயக்கட்டுகள் சம்பந்தமாகக் கேட்டிருக்கிறார்கள். சின்னமநாயக்கன்பாளையம் 2,943 52 ஏக்கர்; குறிச்சி—935·47 ஏக்கர், கொளத்துக் கொம்பை—222.15 ஏக்கர், புழுதிக்குட்டை—40·53 ஏக்கர் நிர்முள்ளிக்குட்டை—288·82 ஏக்கர், சந்திரபிள்ளை வலசை 803·51 ஏக்கர். ஆகமொத்தம் 5,234,00 ஏக்கர்கள் பாசன வசதி பெற வாய்ப்பிருக்கிறது.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டமானது இந்த அரசு இப்போது நவீனப்படுத்தும் 39 திட்டங்களிலே ஒன்றாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனால், ஒப்புதல் அளிக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தின் கீழ் இப்போது தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கின்ற நீர்ப்பாசன நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படுமா? இந்தத் திட்டத்திற்கு எத்தனை ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படும் என்பதையும் தெரிவிக்க விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இதுகுறித்து விவரமான குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன். எந்தத் திட்டம் போடப்பட்டாலும் ஏற்கனவே உள்ள ஆயக்கட்டுகள் பாதிக்கப் பட மாட்டாது. அதற்கு அனுமதிக்கப்படுவதில்லை இந்த உறுதி கொடுத்து, ரைபேரியன் ரைட் என்ற உறுதியை அவர்களுக்கு கொடுத்துவிட்டு, அவர்களுக்கு கொடுக்க வேண்டிய நீரைக் கொடுத்துவிட்டு, எஞ்சியுள்ள உபரி நீரை என்னசெய்வது என்று திட்டமிடப்படுகிறது. அந்த வசிஷ்டா நதியின் உபநதியின் குறுக்கே அணைக்கட்டுவது நல்ல திட்டம், நிறைய நீர் கிடைக்கும் வாய்ப்பு இருந்தால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது நல்லது என்று அரசு கருதுகிறது.

குருமந்தூர் மேடு—அலிங்கியம் சாலையில் கீழ் பவானி வாய்க்காலில் கட்டப்பட்டுள்ள பாலம்

*வினா எண் 741—திரு. கு அ. செங்கோட்டையன்.—மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) கோபி வட்டத்தில் குருமந்தூர் மேட்டிலிருந்து அலிங்கியம் செல்லும் சாலையில் கீழ் பவானி வாய்க்காலுக்கு கட்டப்பட்டுள்ள பாலம் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:—(அ) இல்லை,

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு அ செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, குருமந்தூர் மேட்டிலிருந்து அலிங்கியம் செல்லும் சாலையில் கீழ் பவானி வாய்க்காலுக்குக் கட்டப்பட்டுள்ள பாலத்தை விரிவு படுத்தாத காரணத்தால் பெரிய வாகனங்கள் அருகிலுள்ள 10 கிராமங்களுக்கு மேல் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஏறத்தாழ 10, 12 கிலோமீட்டர் தூரம் சுற்றி வரவேண்டி இருப்பதால், இதை அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த பாலத்தை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் இல்லை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு முறை என்னிடமும், அரசிடமும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கே வரக்கூடிய வாகனங்கள் குறித்த ஒரு அறிக்கையைத் தரவேண்டுமென்று ஸ்தல அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். அறிக்கை வந்த பிறகு இதுகுறித்து முடிவுசெய்யலாம்.

தமிழகத்தில் கனிவள ஆராய்ச்சித் திட்டம்

*வினா எண். 742 திரு. வி பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் கனிவள ஆராய்ச்சித் திட்டத்தை மேற் கொள்ள ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட சிறப்பு நிதி நிறுவனத்தின் (United Nations Development Programme Committee) உதவி கோரப்பட்டு கனிவள ஆராய்ச்சி (Mineral) நடந்ததா?

(ஆ) ஆம் எனில் கனிவள ஆராய்ச்சி எந்தெந்த மாவட்டங் களில் நடந்தது?

(இ) அதன் முடிவுகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட சிறப்பு நிதி உதவியுடன் கனிம ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் 1967-ம் ஆண்டு நவம்பர் முதல் 1975-ம் ஆண்டு மே மாதம் வரை தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டது

(ஆ) வடஆற்காடு தென் ஆற்காடு, தர்மபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சில பகுதிகளில், ஆக சுமார் 30,000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் கனிம ஆய்வு செய்யப்பட்டது.